செ.வெ. எண்: 86 நாள்: 27.01.2012

# செய்தி வெளியீடு

நாட்டின் ஒருமைப்பாட்டினை வளர்ப்பதிலும், மாணவ, மாணவியரிடையே சிந்தனை கிளர்ச்சியை ஏற்படுத்துவதிலும், அறிவு புரட்சியை தோற்றுவிப்பதிலும், அரசுக்கு வருமானத்தை ஈட்டித் தருவதிலும், சுற்றுலா முக்கிய பங்காற்றுகிறது என்று சொன்னால் அது மிகையாகாது. தொடர்ந்து அதிகரித்து வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு, சுற்றுலாப் பயணிகளுக்கு தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இதன் அடிப்படையில், தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் அருகில், புத்தன்தருவாய் கிராமத்தில் சொக்கன் குடியிருப்பில் உள்ள மணல்மாதா திருத்தலத்திற்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகளின் நலனுக்காக, இத்திருத்தலப் பகுதியில் பயணிகளின் வாகனம் பாதுகாப்பாக நிறுத்துவதற்கான நிறுத்துமிடம் அமைப்பதற்காக 15 லட்சம் ரூபாயும், ஆண்கள் மற்றும் பெண்களுக்கான குளியலறை மற்றும் கழிப்பறை கட்டுவதற்காக 4 லட்சம் ரூபாயும், காத்திருப்போர் கூடம் அமைப்பதற்காக 5 லட்சம் ரூபாயும், குடிநீர் வசதி செய்து தருவதற்காக 1 லட்சம் ரூபாயும் ஆக மொத்தம் 25 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இதே போன்று, இந்தியாவின் முக்கிய ஆன்மீக மற்றும் சுற்றுலாத் தலமாக விளங்கும், அருள்மிகு ராமநாதசுவாமி திருக்கோயிலுக்கும், தனுஷ்கோடிக்கும் ஏராளமான பக்தர்கள் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் வருகை புரிவதைக் கருத்தில் கொண்டு இங்கு வரும் பக்தர்கள் மற்றும் சுற்றுலா பயணிகளின் வசதிக்காக ராமேஸ்வரத்திலுள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக வளாகத்தில் 2 கோடி ரூபாய் செலவில் ஒரு சுற்றுலா ஓய்வு இல்லம் கட்டுவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

மேலும், நாகப்பட்டினம் மாவட்டம் திருக்கடையூரில் உள்ள பிரசித்திப்பெற்ற அருள்மிகு அபிராமி அம்மன்-அமிர்தகடேஸ்வரர் திருக்கோவிலுக்கு, 60 வயது நிறைவு மற்றும் 80 வயது நிறைவினை ஒட்டி பல்வேறு பக்தர்கள் தங்கள் உறவினர்களுடன், பூஜைகள் செய்வதற்காக அதிக அளவில் வருகைத் தருவதால் அவர்களின் வசதிக்காக சுற்றுலா ஒய்வு இல்லம் கட்டுவதற்காக 1 கோடியே 20 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இதன் மூலம் சுற்றுலாப் பயணிகளுக்கு கூடுதல் வசதிகள் கிடைப்பதுடன், சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையும் கணிசமாக அதிகரிக்கும்.

*******

வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சென்னை.
நாள்: 27.1.2012